மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.303/2017</u>

2025ம் ஆண்டு ஜுலை மாதம் 10ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முத்துசாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>10.07.2025 வா.சா.2 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1.எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதி அழைத்ததன் பேரில் தான் இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான் என்ன வழக்கு நடக்கிறது இந்த வழக்கில் என்ன சாட்சி சொல்ல வேண்டும் என்ற விபரங்களை வாதி தான் எனக்கு சொன்னார் என்றால் சரிதான். கச்சேரி வலசில் வசிக்கும் குமாரசாமி கவுண்டர் மகன் முத்துசாமி நான் தான் என்பதற்கு நீதிமன்றத்தில் நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. என்னிடம் காட்டப்படும் எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் யார் தயார்

செய்தார்கள் என்றால் நான் சொல்லி யுவஸ்ரீ வழக்கறிஞர் தயார் செய்து கொடுத்தார் மேற்படி திரு யுவஸ்ரீ வழக்கறிஞர் என்பவர் 2023 ஆம் ஆண்டில் தான் காங்கேயம் நீதிமன்றத்திற்கு வந்தார் என்றும் மேற்படியார் தயார் செய்து கொடுத்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்ட தேதியில் மேற்படி திரு யுவஸ்ரீ வழக்கறிஞர் என்பவர் வழக்கறிஞராக பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. மேற்படி வழக்கறிஞரின் அலுவலகம் எங்கு உள்ளது என்றால் ஈரோட்டில் உள்ளது முகவரி தெரியுமா என்றால் தெரியாது சாமிநாதனின் தகப்பனார் பழனிச்சாமி என்பவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் மாமன் மகன் உறவு முறை. எனது மாமா பெயர் என்னவென்றால் முத்துசாமி கவுண்டர் அவர் எப்போது இறந்தார் என்றால் தேதி ஞாபகம் இல்லை பழனிச்சாமி கவுண்டரின் முதல் மனைவி பெயர் என்னவென்றால் சரஸ்வதி. அவர் எந்த ஊரைச் சார்ந்தவர் என்றால் எனது ஊரைச் சார்ந்தவர் சரஸ்வதிக்கும் பழனிச்சாமிக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் 1974 இல். மேற்படியார்கள் எவ்வளவு நாட்கள் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்பதும் எதன் காரணமாக பிரிந்தார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியுமா என்றால் இரண்டு மூன்று ஆண்டுகள் ஒன்றாக வசித்து வந்தார்கள்பின்பு பிரிந்து விட்டார்கள். எதனால் பிரிந்தார்கள் என்றால் குழந்தைகள் இல்லை மற்றும் சிறு சிறு பிரச்சனைகள் காரணமாக பிரிந்து விட்டார்கள். கணவனை விட்டு பிரிந்த பிறகு சரஸ்வதி தனது பெற்றோருடன் தான் வசித்து வந்தார் என்றால் சரிதான்.

4. சரஸ்வதி என்ன வேலைக்கு சென்றார் என்றால் வீட்டில் தான் இருந்தார். தற்போதும் வீட்டில் தான் இருக்கிறார் என்றால் ஆமாம். சரஸ்வதி அவரின் வேலையை அவரை செய்து கொண்டு தற்போது நடமாடி கொண்டிருக்கிறார் என்றால் சரிதான். கடைசியாக சரஸ்வதியை நான் எப்போது பார்த்தேன் என்றால் சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு பார்த்தேன். என்னிடம் பேசினாரா என்றால் பேசினார் ஆனால் சரியான சுவாதீனம் அவருக்கு இல்லை என் பெயரை சொல்லி என்னை கூப்பிட்டு பேசினார் அதற்கு பிறகு பேசுவதற்கு அவருக்கு சுவாதீனம் இல்லை.

5. சரஸ்வதி தற்போது வரை நல்ல புத்தி சுவாதீனத்துடன் தான் இருக்கிறார் என்றும் வாதி சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் சரஸ்வதிக்கு புத்தி சுவாதீனம் இல்லை என நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 5 ம் பிரதிவாதி யாருடைய செங்கல் சூளைக்கு வேலைக்கு வந்ததாக நான் சொல்லி உள்ளேன் என்றால் பழனிச்சாமியின் செங்கல் சூளைக்கு வேலைக்கு வந்தார் அது எந்த முகவரியில் உள்ளது என்றால் முத்தூர் சாலையில் நல்லாகவுண்டன் காட்டில் அவரது தோட்டத்தில் உள்ளது. இன்று வரை செங்கல் சூளை அங்கு உள்ளது என்றால் செங்கல் சூளை இல்லை காடு மட்டும் உள்ளது அந்த காடு யாரின் அனுபவத்தில் உள்ளது என்றால் தற்போது சுவாமிநாதன் தான் அதை பார்த்து வருகிறார். நல்லாகவுண்டன் காட்டில் உள்ள சொத்துக்களை சுவாமிநாதன் கவனித்து வருகிறார் என்ற விபரங்களை நான் எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. தற்போது கேட்டதால் சொல்கிறேன் 5ம் பிரதிவாதியின் கணவர் என்று நான் சொல்லும் ரங்கசாமி நாயக்கரை எனக்கு தெரியுமா என்றால் செங்கல் சூளைக்கு வரப்போக நான் அவரை பார்த்து உள்ளேன் அவர் எந்த ஊரைச் சார்ந்தவர் அவரது பூர்வீகம் எது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான் பிரதிவாதியை பழனிச்சாமி தனது ஆசை நாயகியாக வைத்துக் கொண்டது சம்பந்தமாக சரஸ்வதி பிரச்சினைக்கு ஏதேனும் போனாரா என்றால் போகவில்லை. நான் சென்று அது சம்பந்தமாக பழனிச்சாமிக்கு புத்திமதி ஏதேனும் சொன்னேனா என்றால் நான் சொல்வதைக் கேட்கும் நிலையில் அவர் இல்லை.

7. செங்கல் சூளைக்கு வரும்போது வரதராஜுக்கு சுமார் எத்தனை வயதில் இருக்கும் என்றால் மூன்று நான்கு வயது இருக்கும். எப்போது இருந்து 5ம் பிரதிவாதியோடு பழனிச்சாமி சேர்ந்து வாழ்ந்து வந்தார் என்றால் செங்கல் சூளைக்கு 5ம் பிரதிவாதி வேலைக்கு வந்த கொஞ்ச நாட்களிலேயே வரப்போக இருந்தார்கள் எந்த நாள் என்று எனக்கு சரியாக தெரியவில்லை.நான் சொல்வது உண்மை அல்ல என்றும் பழனிச்சாமி சரஸ்வதிக்கு தெரியவே ஐந்தாம் பிரதிவாதியை திருமணம் செய்து கொண்டு அவரோடு சேர்ந்து வாழ்க்கை நடத்தி வந்தார் என்றும் அதனால் தான் 5ம் பிரதிவாதியிடம் சரஸ்வதி எந்த பிரச்சனைக்கும் போகவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

8. மேற்படி திருமண வாழ்க்கையின் பயனாகத்தான் பழனிச்சாமிக்கும் 5ம் பிரதிவாதிக்கும் 4ம் பிரதிவாதி வரதராஜ் பிறந்தார் என்று சொன்னால் சரியல்ல. பழனிச்சாமி இறந்து சுமார் ஏழு எட்டு ஆண்டுகள் இருக்கும். அதற்கு நான் சென்று இருந்தேனா என்றால் ஆமாம் எந்த

முகவரியில் பழனிச்சாமி இறந்தார் என்றால் செங்கல் சூளையில் தான் இறந்தார் இறப்பு வீட்டில் யார் யார் இருந்தார்கள் என்றால் அவரின் பங்காளிகள் 4, 5 பேர் இருந்தார்கள் நாங்கள் ஊர்காரர்கள் இருந்தோம் பழனிச்சாமி இறக்கும்போது அவருடன் யார் யார் குடும்பமாக இருந்தார்கள் என்றால் நல்ல முத்துவும் பழனிச்சாமியும் தான் ஒன்றாக இருந்தார்கள். பழனிச்சாமி இறந்து போனதற்கு சரஸ்வதி வந்திருந்தாரா என்றால் வந்தது போல் எனக்கு ஞாபகம் இல்லை.

9. விஜயா இறப்பு வீட்டில் இருந்தாரா என்றால் அதுவும் எனக்கு ஞாபகம் இல்லை. பழனிச்சாமி இறந்தபோது வரதராஜன் அங்கு இருந்தாரா என்றால் அது எனக்கு தெரியாது என்றால் இருந்தாரா அது எனக்கு தெரியும் நான் சொல்வது உண்மை அல்ல என்றும் பழனிச்சாமி செங்கல் சூளையில் வைத்து இறக்கவில்லை என்றும் திருவள்ளுவர் நகரில் உள்ள வீட்டில் வைத்து இறந்தார் என்றும் அப்போது அவருடன் 5ம் அதிகாரியும் 4ம் பிரதிவாதியும் ஒரே குடும்பமாக வசித்து வந்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

10. பழனிச்சாமி இறந்த போது அவரின் இறுதி காரியங்களை 4ம் பிரதிவாதி தான் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. அந்த இறப்பிற்கு சரஸ்வதி வந்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் பழனிச்சாமி இறப்புக்கு வரவில்லை என்றும் வாதி சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வாதியின் தாயார் எனக்கு என்ன உறவு என்றால் பழனிச்சாமியை திருமணம் செய்ததன் அடிப்படையில் அவர் எனக்கு உறவு அதற்கு முன்பு உறவு இல்லை. சுப்பிரமணியன் மனைவி கனகாம்பரம் என்பவர் எனக்கு என்ன உறவு என்றால்

எனக்கு  அவர் அண்ணி முறை உறவு ஆவார். நல்ல முத்துவிற்கும் கனகாம்பரத்திற்கும் என்ன உறவு என்றால் நங்கையால் கொழுந்தியாள் உறவு முறை.

11. சாமிநாதனும் கனகாம்பரமும் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்து நடத்தி வருகிறார்கள் என்றால் இல்லை. சாமிநாதன் மட்டும் தான் தாக்கல் செய்துள்ளார் வாதி சாமிநாதன் எனக்கு உறவினர் என்பதால் அவர் சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் நான் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது சாட்சியம் நிராகரிக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

(மேற்படி 4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையே ஐந்தாம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையாகவும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.07.10 19:00:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்